ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1943/8 - 2015 නොවැම්බර් මස 30 වැනි සඳුදා - 2015.11.30

*1943/8 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவச் சட்டத்தின்**
***16 (2ஈ) ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படும் அறிவித்தல்***

*உத்தேச கொழும்புத் துறைமுக நகர அபிவிருத்தி செயற்றிட்டம் பற்றிய மேலதிக சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை*

*1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் நியதிகளுக்கு அமைவாக பத்தரமுல்ல, செத்சிரிபாய, 1 ஆவது கட்டம், மூன்றாம் மாடி, மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட "உத்தேச கொழும்புத் துறைமுக நகர அபிவிருத்தி செயற்றிட்டம்" சம்பந்தமாக மேலதிக சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை பொதுமக்களின் பரிசீலனைக்காக கீழ் குறிப்பிடப்படும் இடங்களில், நாள் முழுவதும் முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் 4.15 மணி வரை 2015.12.01 ஆந் திகதி முதல் 30 நாட்களுக்கு வைக்கப்பட்டிருக்கும். (வார இறுதி மற்றும் அரச விடுமுறை நாட்களில் பரிசீலனை செய்ய முடியாது).*

1. மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு, இல. 500, டி. பீ. ஜயா மாவத்தை, கொழும்பு - 10.
2. கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம், புதிய செயலகம், 4 ஆவது மாடி, மாளிகாவத்தை, கொழும்பு - 10.
3. கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம், புதிய செயலகம், 3 ஆவது மாடி, மாளிகாவத்தை, கொழும்பு - 10.
4. மத்திய சுற்றாடல் அதிகார சபை, "பரிசர பியச", இல. 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.
5. மாவட்ட செயலகம், நாரஹேன்பிட்டி, கொழும்பு - 05.
6. பிரதேச செயலகம் (கொழும்பு), டாம் வீதி, கொழும்பு -12.
7. பிரதேச செயலகம் (திம்பிரிகஸ்யாய), நாரஹேன்பிட்டி, கொழும்பு- 05.
8. பிரதேச செயலகம், வத்தளை.
9. கொழும்பு மாநகர சபை, கொழும்பு.
10. வத்தளை பிரதேச சபை, வத்தளை
11. பிரதேச காரியாலயம், கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம், சுங்க வீதி, நீர்கொழும்பு.

இந்த உத்தேச கொழும்புத் துறைமுக நகர அபிவிருத்தி செயற்றிட்டத்தினால் சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கம் தொடர்பான அறிக்கை சம்பந்தமாக பொதுமக்களின் கருத்துக்களை 2015.12.01 ஆந் திகதி முதல் 30 நாட்களுக்கு கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு எழுத்து மூலமாக சமர்ப்பிக்குமாறு அறியத் தருகிறேன்.

பீ. கே. பிரபாத் சந்திரகீர்த்தி,
பணிப்பாளர் நாயகம்.

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம்,
4 ஆவது மாடி, புதிய செயலகம், மாளிகாவத்தை,
கொழும்பு 10,
2015, நவெம்பர் 30.

தொலைபேசி இல. : 011- 2449754, 011- 2387922, 011- 2449197
தொலைநகல் இல. : 011- 2438005, 011-2472623.

12- 488

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.